# மெட்ரோ ரயில்: இரண்டாம் கட்ட கட்டுமானப் பணி விரைவில் தொடங்கப்படும்

## அமைச்சர் எம்.சி.சம்பத்

சென்னை,ஜூலை 4: மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட திட்டத்தின் ஒரு பகுதியான, 52.01 கி.மீ. தொலைவில் மாதவரம்-சோழிங்கநல்லூர், மாதவரம்-சென்னை புறநகர் பேருந்து நிலையம் வரையிலான இரண்டு வழித்தடங்களில் கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன என்று தமிழக தொழில்துறை அமைச்சர் எம்.சி. சம்பத் தெரிவித்தார்.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில், கோயம்பேடு மெட்ரோ பணிமனையில் 1.2 மெகாவாட் சூரியசக்தி மின் உற்பத்தி திட்டம், கோயம்பேடு வாகன நிறுத்தப் பகுதியில் தானியங்கி வாகன நிறுத்த மேலாண்மை திட்டம் ஆகியவற்றை தமிழக தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் வியாழக்கிழமை தொடங்கி வைத்தார். இதைத் தொடர்ந்து, கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சில் அவர் பேசியது:

சென்னை மெட்ரோ ரயில் சேவை 45 கி.மீ. தொலைவில் இரண்டு வழித்தடங்களில் நடைபெற்று வருகிறது. இதுதவிர, திருவொற்றியூர், விம்கோ நகர் வரையிலான நீட்டிப்புப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் 118.9 கி.மீ. தொலைவில் 3 வழித்தடங்களுக்கு கொள்கை அளவிலான ஒப்புதலை மாநில அரசு வழங்கியுள்ளது. மேலும் மத்திய அரசின் ஒப்புதல், நிதியுதவி, பன்னாட்டு நிதியுதவி பெறுவதற்கு பரிந்துரை செய்துள்ளது.



சென்னை கோயம்பேடு மெட்ரோ ரயில் பணிமனையில் 1.2 மெகா வாட் சூரியசக்தி மின் உற்பத்தி திட்டத்தை தொடங்கி வைத்து, பார்வையிடும் தமிழக தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத். உடன் மெட்ரோ ரயில் நிறுவனத்தின் உயரதிகாரிகள்.

இரண்டாம் கட்ட மெட்ரோ திட்டத்தின் ஒரு பகுதியான, 52.01 கி.மீ. தொலைவில் மாதவரம்-சோழிங்கநல்லூர், மாதவரம்-சென்னை புறநகர் பேருந்து நிலையம் வரையிலான இரண்டு வழித்தடங்களில் கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன. இதற்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள வழித்தடங்களுக்கு, பன்னாட்டு நிதி நிறுவனங்களின் ஒப்புதல் பெறுவதற்கு சென்னை மெட்ரோ ரயில் நிறுவனமும், தமிழக அரசும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுவருகின்றன.

கோயம்பேடு பணிமனை வளாகத்தில் 1.2 மெகா வாட் திறன் கொண்ட சூரியசக்தி மின் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. மரபுசாரா மின் உற்பத்தியான சூரிய சக்தி மின்உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்குஎனது பாராட்டுக்கள் என்றார் அவர்.

நிகழ்ச்சியில், மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பங்கஜ்குமார் பன்சால், நிறுவனத்தின் இயக்குநர் (இயக்கம்) எல். நரசிம்மபிரசாத், இயக்குநர் (நிதி), சுஜாதா ஜெயராஜ் உள்பட பலர் பங்கேற்றனர்.